சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.24/2019

2024 ஆம் ஆண்டு பிப்வரி மாதம் 28 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உமாமகேஷ்வரி | வயது | 40 |
| க/பெ | சண்முகம் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காரேகவுண்டன்புதூர், | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | இல்லத்தரசி |

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

நான் தற்போது எங்கு இருந்து வருகிறேன் என்றால் எனது அம்மா வீடான கதவு கரையில் இருந்து வருகிறேன். நான் தற்போது யாருடன் வந்தேன் என்றால் தனியாகத் தான் பேருந்தில் வந்தேன். இன்று எனது கணவர் நீதி மன்றம் வந்துள்ளாரா என்றால் இல்லை. 2 ம் பிரதிவாதி சண்முகம் தான் எனது கணவர் என்றால் சரி தான். 3 ம் பிரதிவாதி கணேஷ்குமார் எனது கணவரின் இளைய சகோதரர். அவரும் இன்று நீதி மன்றத்திற்கு வரவில்லை. நானும் எனது கணவரும் எவ்வளவு ஆண்டுகளாக பிரிந்து இருக்கிறோம் என்றால் 2015 ல் இருந்து பிரிந்து இருக்கிறோம். ஆனால் நிரந்தரமாக 2019 ல் இருந்து தான் பிரிந்து இருக்கிறோம். இந்த வழக்கிற்காகத் தான் பிரிந்து இருக்கிறோம் என்றால் இல்லை. நானும் எனது கணவரும் பிரிந்து உள்ளதை காட்ட ஆவணங்களோ என் கணவர் மீது நான் ஏதாவது வழக்கோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்போ அனுப்பி உள்ளேனா

என்றால் இந்த வழக்கை தவிர வேற எந்த ஆதாரமும் இல்லை. இந்த வழக்கை எனது கணவர் சொல்லித் தான் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் இல்லை. 5ம் பிரதிவாதி வங்கியுடன் எனக்கு எந்த விரோதமும் இல்லை. எனது கணவருக்கும் அவரது சகோதரர் ஆன 3ம் பிரதிவாதிக்கும் இடையே ஆன பாக பிரிவினை சம்மந்தமாகத் தான் இந்த வழக்கு என்றால் என் குழந்தைகளுக்கு சொத்து வேண்டும் என தாக்கல் செய்து உள்ளேன். அவர்கள் பிரச்சனைக்கு அவர்களும் தாக்கல் செய்துள்ளார்கள். 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு இடையே பாகப் பிரிவினை பிரச்சனை இருப்பது உண்மை தான் என்றால் சரி தான். வா.சா.ஆ.5ன் படி எனது கணவர் தான் முதலில் பாக வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கிலும் சமரச தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரி தான். ஆனால் அது எனது திருமணத்திற்கு முந்தையது. அந்த தேதியில் வாதிகளும் பிறக்கவில்லை என்றால் சரி தான். அதனால் வா.சா.ஆ.5 வாதிகள் இருவரையும் கட்டுப்படுத்தும் என்றால் என்ன சொல்வது என்று தெரியவில்லை. அந்த பாகப் பிரிவினையை எப்படியாவது மறுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் எனது கணவரின் ஏற்பாட்டில் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. தாவா சொத்துக்கள் எனது மாமனார் 1ம் பிரதிவாதி பொன்மலை சாமி என்பவருக்கு சுயார்ஜித சொத்துக்கள் என்றால் அது பரம்பரை சொத்து ஆகும். எதன் அடிப்படையில் எனது கணவரின் பரம்பரை சொத்து என கூறுகிறேன் என்றால் எனது மாமனாரின் தாத்தா குமரக் கவுண்டர் என்பவரின் சொத்து என்பதால் அவ்வாறு கூறுகிறேன். குமரக் கவுண்டரின் பேரில் எந்த ஒரு ஆவணம் இல்லை என்றால் சரி அல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். தேவைப்பட்டால் தாக்கல்

செய்கிறேன். தாவா சொத்து பூர்வீக சொத்து என கூறுவது தவறு என்றும் வாதிகளுக்கு தாவா சொத்தில் எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரி அல்ல. 5ம் பிரதிவாதி வங்கியில் எதற்காக கடன் பெறப்பட்டது என்றால் மில்லை நடத்துவதற்காக கடன் பெறப்பட்டது. அந்த மில் எனது திருமணத்திற்கு முன்னரே 2007ம் ஆண்டு கட்டப்பட்டது என்றால் சரி தான். அந்த மில்லை கட்டும் போதே வங்கியில் கடன் பெற்று தான் கட்டப்பட்டது என்றால் இல்லை. 2009 ல் தான் மில் கட்டப்பட்டது. என்னிடம் காட்டப்படுவது தான் என் கணவரும் எனது மாமனாரும் சேர்ந்து 5ம் பிரதிவாதியின் முந்தைய வங்கியான ஆந்திரா வங்கியில் அளித்த கடன் விண்ணப்பம் என்றால் சரி தான். அது பி.வா.சா.ஆ.1 . பி.வா.சா.ஆ.1 அடங்கிய கோப்பில் பக்கம் எண்கள் 83, 87, 94 மற்றும் 111 ஆகியவற்றில் உள்ளவை எனது கணவர் மற்றும் மாமனாரின் கையொப்பங்கள் என்றால் சரி தான். அந்த பக்கங்கள் பி.வா.சா.ஆ.2 (4 வரிசை). பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 காலத்தில் வாதிகள் பிறக்கவே இல்லை என்றால் சரி தான். கோவையில் உள்ள கடன் வசூல் தீர்ப்பாயத்தில் 5ம் பிரதிவாதி எனது கணவர், மாமனார் மீது ஓ.ஏ.எண்.509/2016 என்ற மனுவை தாக்கல் செய்து உள்ளார்கள் என்றால் சரி தான். அந்த மனு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரி தான். அந்த மனு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் நாங்கள் ஒற்றுமையாக இருந்த போது நானும் அந்த வழக்கிற்காக சென்று உள்ளேன். தாவா சொத்தில் வாதிகளுக்கு உரிமை உள்ளதாக கடன் வசூல் தீர்ப்பாயத்தில் எந்த மனுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். அதனால் இந்த வழக்கின் பரிகாரம் 5ம் பிரதிவாதியையோ ஓ.ஏ.எண்.509/2016 வழக்கையோ கட்டுப்படுத்தாது என்றால் சரி அல்ல.

என்னுடைய பரிகாரத்திலும் வா.சா.ஆ.5 செல்லாது என பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரி தான். வா.சா.ஆ 5 காலத்திலேயே பாகப் பிரிவினை அமல் படுத்தப்பட்டது என்றும் அதனால் தாவா சொத்தில் வாதிகளுக்கு உரிமையே இருந்தாலும் வா.சா.ஆ.5 அவர்களை கட்டுப்படுத்தும் என்றால் சரி அல்ல. 3ம் பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு பெண் குழந்தை உள்ளது. அவரது பெயர் என்ன என்றால் தெரியாது. எனது வழக்கு உண்மையாக இருந்தால் அந்த குழந்தையையும் இந்த வழக்கில் சேர்த்து இருப்பேன் என்றால் அந்த குழந்தை வழக்கு தாக்கல் செய்த போது பிறக்கவில்லை. வா.சா.ஆ.5ன் அடிப்படையில் அவரவர் பாகத்தை அவரவர் அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரி தான். அதனால் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக கூறி இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளது தவறு என்றால் சரி அல்ல. வா.சா.ஆ.6 முதல் 9 வரையான ஆவணங்கள் வாதிகளை கட்டுப்படுத்தும் என்றும் அதனை மறுப்பதற்கு வாதிகளுக்கு உரிமை இல்லை என்றால் சரி அல்ல. என்னுடைய பிராது மற்றும் நிரூபண வாக்கு மூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை அல்ல என்றும் பொய்யான வழக்கு என்றால் சரி அல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தின் படி அவரவரர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து தனித் தனி பட்டா பெற்று கொண்டார்கள் என்றால் சரி தான். 16.05.2007 அன்று எனது கணவரும் எனது மாமனாரும் தொழிலுக்காக ஒரு கூட்டாண்மை ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்கள் என்றால் சரி தான். 16.12.2009 அன்று தாவா சொத்துக்களை எனது மாமனாரும், கணவரும் 5ம் பிரதிவாதி அப்போதைய வங்கியான ஆந்திரா வங்கியில் அடமானம் வைத்தார்கள் என்றால் சரி தான்.

ஆந்திரா வங்கி தான் தற்போது 5 ம் பிரதிவாதி வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரி தான். 5 ம் பிரதிவாதி 28.04.2001 ல் மாவட்ட குற்ற நடுவரிடம் தாவா சொத்தில் சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்து அதன் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரி தான்.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஓம்/- கா. கெங்காராஜ்,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.